THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

SECOND SESSION OF THE SECOND LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

Friday, 25th October 1957.

The House met in the Assembly Chamber, Fort St. George, at twelve noon, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

MR. SPEAKER : இந்தச் சட்டசபையின் இரண்டாவது கூட்டத்திற்கு உங்கள் எல்லோரையும் வரவேற்கிறேன்.

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

I.—CONDOLENCE RESOLUTION ON THE DEATH OF SRI A. J. JOHN, GOVERNOR OF MADRAS.

MR. SPEAKER : நமது கவர்னர் A. J. ஜான் மறைந்த செய்தியை உங்களுக்குத் துக்கத்தோடு தெரிவிக்கிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் சபாநாயகர் அவர்களே, ஆழ்ந்த துக்கத்துடன் கீழ்க்கண்ட தீர்மானத்தை இந்தச்சபையின் முன் பிரேரிக்கிறேன் :—

" This House places on record its deep sense of sorrow at the passing away on the 1st of October 1957 of Sri A. J. John, Governor of Madras, and requests the Speaker to convey to Srimathi John and other members of his family its sympathy with them in their great loss. "

திரு ஜான் அவர்கள் சிறிது காலம் தான் நம் ராஜ்யத்தின் கவர்னராக இருக்கக் கூடிய வாய்ப்பு நமக்குக் கிடைத்தது. அந்தக் குறுகிய காலத்திற்குள்ளாக அவர்களை நாம் எல்லோரும் ஓரளவு தெரிந்து கொள்ளக்கூடிய சந்தர்ப்பம் நமக்குக் கிடைத்தது. அவர்கள் கவர்னராக வந்தபோது பலர் சந்தேகப்பட்டார்கள், ' இவர்கள் கவர்னர் பதவியை எந்த முறையில் வகித்து நிர்வகிக்கப்போகின்றார்களோ ' என்பதைப் பற்றி. ஆனால் சிறிது காலத்திற்குள் அந்தப் பதவிக்குத் தாம் ஏற்றவர் என்பதை அவர்கள் நிரூபித்துக் காண்பித்தார்கள்.

திரு ஜான் அவர்களை அவர் இங்கே கவர்னராக வருவதற்கு முன்பே அறிந்திருந்தேன். திருவாங்கூர்-கொச்சி ராஜ்யம் இணைக்கப்பட்டதற்குப் பிற்பாடு அங்கே அவர்கள் நிதி மந்திரியாக இருந்தபோதும், முதல் மந்திரியாக இருந்தபோதும், அவரிடம் நெருங்கிப் பழகக்கூடிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அவர்களுடன் பழகக்கூடிய யாரும் உடனடியாக ' அவர் ஓர் நல்ல மனிதர் ' என்ற முடிவுக்கு வருவார்கள். எளிய வாழ்க்கை, உயர்ந்த எண்ணங்கள் என்ற அடிப்படையில் அவர்கள் வாழ்க்கை அமைந்து இருந்தது.

சென்னை ராஜ்யத்திற்கு அவர்களுடைய தொடர்பு ஏற்பட்டது இப்போது கவர்னராக வந்தபோது மட்டும் அல்ல. அவர்கள் தம்முடைய கல்லூரிப் படிப்பை திருச்சிராப்பள்ளி செயின்ட் ஜோஸப் காலேஜில் படித்து முடித்தார்கள். அதற்குப் பிற்பாடு சென்னை சட்டக் கல்லூரியில் சேர்ந்து படித்து அந்தப் பட்டத்தையும் பெற்றார்கள். அதற்குப் பிற்பாடு சிறிது காலம்

வக்கீல் தொழில் நடத்திவிட்டுப் பிறகு அரசியலில் ஈடுபட்டு—திருவாங்கூர் ராஜ்யத்திலே—சுதந்திர இயக்கங்களில் பெரும் பங்கு எடுத்துக்கொண்டு சிறை சென்றிருக்கிறார்கள். அதற்குப் பிற்பாடு அவர்கள் தேர்தலிலே பல சமயங்களில் போட்டி இல்லாமல் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறிது காலம் சபாநாயகராகவும், சிறிது காலம் முதல் மந்திரியாகவும், பிறகு நிதி மந்திரி, உள்நாட்டு மந்திரி ஆகவும் இருந்து அந்த ராஜ்யத்திற்குப் பெரும் பணி ஆற்றியிருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கையை நாம் பார்ப்போமானால் தேசபக்தியுடன், தெய்வ பக்தியும் சேர்ந்து, இந்த இரண்டு பக்தியும் சேர்ந்து இருந்ததன் காரணமாக நேர்மையான ஒரு வாழ்க்கையை நடத்திவந்தார்கள் என்பதை நாம் அவர்கள் செய்துள்ள ஒவ்வொரு காரியத்திலிருந்தும் பார்க்கிறோம்.

எந்த விஷயமாக இருந்தாலும் அலசிப் படித்துப் பார்த்து அதில் ஏதாவது சிறிது குறைஇருந்தாலும் கூட அதை எடுத்துச் சொல்லி அந்தக் குறையை நீக்கித்தான் அதற்கு முடிவு கட்டவேண்டுமென்ற முறையில் அவர்கள் தன்னுடைய காரியங்களை நடத்தி வந்தார்கள்.

இன்றைக்கு அவர்களுடைய மறைவு நம் ராஜ்யத்திற்கு மட்டும் எற்பட்ட நஷ்டம் அல்ல, கேரள ராஜ்த்திற்கு மட்டும் அல்ல, நாட்டுக்கே ஒரு நல்ல மனிதரை இழந்தோம் என வருந்துகிற முறையில் ஏற்பட்ட நஷ்டம் என்பதைத் தெரிவித்துக் கொண்டு, இந்தத் தீர்மானத்தை எற்குமாறு சபையைக் கேட்டுக் கொள்கிறேன்.

SRI V. K. RAMASWAMI MUDALIAR: கனம் சபாநாயகர் அவர்களே, இந்தத் தீர்மானத்தை ஆதரித்துச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

காலஞ் சென்ற திரு ஜான் அவர்கள் நம்முடைய ராஜ்யத்தின் கவர்னராக சென்ற டிசெம்பர் மாதத்திலிருந்து ஒரு பத்துமாத காலம்தான் நம்மிடையே இருந்து பணியாற்றினார்கள். இருந்தபோதிலும் நல்லபடியாகப் பணியாற்றி வந்திருக்கிறார். அவர் செய்த தொண்டுகளை நாம் மறக்கமுடியாது.

முதன் முதலாக அவர் 1925 ம் வருஷம் அரசியலில் ஈடுபட்டார். ஈடுபட்டு நல்ல தொண்டுகளைச் செய்து வந்தார். பின்னால் 1944-ம் வருஷம் எலெக்ஷனுக்காக நின்றபோது அவர் தேசத் தொண்டனுக்ச் சிறை சென்றதன் காரணமாக அப்போது இருந்த சர்க்கார் அவரது நாமினேஷன் பேப்பரை அங்கீகாரம் செய்யவில்லை. பின்னால் நடந்த எலெக்ஷனில் நின்று வெற்றியுற்றார். அதன் பிறகு அமைச்சராக இருந்து திருவாங்கூர் ராஜ்யத்தில் நல்லபடி பணி ஆற்றினார். சபாநாயகராக இருந்தார். பிற்பாடு புது வேலைகளில் ஈடுபட்டு ஆடம்பரம் இன்றி பல காரியங்களைச் செய்து வந்ததை முன்பே பார்த்திருக்கிறோம். நல்ல அரசியல்வாதியான அவரை நம் மாகாணத்திற்குக் கொண்டுவந்து கவர்னராகப் போட்டபோது சில பகுதியினருக்கு ஒரு பக்கம் திருப்தி இல்லாமல் இருந்தபோதிலும் எல்லாருக்கும் அவர் நல்ல முறையில் பணியாற்றி வந்தார் என்பதை மறுக்க முடியாது.

இப்போது அவரை இழந்துவிட்டதுபற்றி வருந்த வேண்டியவர்களாக இருக்கிறோம். எங்கள் சார்பாகவும் அவரது குடும்பத்தாருக்கு அனுதாபத்தைத் தெரிவித்துக்கொண்டு, அவருடைய மனைவியாருக்கும் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டு சபை முன்பு இருக்கும் தீர்மானத்தை அங்கீகரித்து முடித்துக் கொள்கிறேன்.

12-10 p.m. **MR. SPEAKER:** இப்பொழுது கொண்டுவந்திருக்கும் இந்த அனுதாப தீர்மானத்தில் நானும் கலந்துகொள்ளுகிறேன். கனம் நிதி அமைச்சர் சொன்னதுபோல் ஸ்ரீ A. J. ஜான் அவர்கள் திருவாங்கூர்-கொச்சி ராஜ்யத்தில் முதல் அமைச்சராகவும் நிதி அமைச்சராகவும், சபாநாயகராகவும் பணியாற்றி வந்திருக்கிறார். எல்லோரிடத்திலும் நல்லவர் என்ற

25th October 1957] [Mr. Speaker]

பெயர் வாங்கியவர். சில நாட்களுக்கு முன்பு ராஷ்ட்ரபதி அவர்களுடன் ஸ்ரீ A. J. ஜான் அவர்கள் எங்கள் பேட்டைக்கு வந்திருந்தபோது, அவர் சிறிய ஆபிரேஷன் செய்துக் கொள்வதற்கு ஆஸ்பத்திரிக்குப் போவதாக எங்களிடம் தெரிவித்தார். நாங்கள் எல்லோரும் அது ஒரு சிறிய ஆபிரேஷன்தான், ஆபத்து ஒன்றும் எற்படாது, என்று நம்பினோம். ஆனால் கடவுள் இச்சை வேறாக இருந்தது. அவர் இறந்தது நம் எல்லோருக்கும் நஷ்டம். இந்த அனுதாபத் தீர்மானத்தை அங்கீகரிக்கும் முறையில் நீங்கள் எல்லோரும் இரண்டு நிமிஷம் மௌனமாக நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

The resolution was carried *nem. con.* all the Members of the Assembly standing for two minutes.

MR. SPEAKER : As a mark of respect to the late Governor, I adjourn the House till 9 o'clock tomorrow morning.

The House then adjourned.

II.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A

1. *Notification issued with G.O. Ms. No.* 1667, *Health, dated* 3rd *June* 1957, *revising the pay scales of Motor Mechanics under the Public Health Department.*

2. *Notification issued with G.O. Ms. No.* 1863, *Industries, Labour and Co-operation, dated* 29*th May* 1957, *omitting rule* 77-*A of the Madras Factories Rules*, 1950.

3. *Notification issued with G.O. Ms. No.* 1498, *Home, dated* 31*st May* 1957, *exempting car MSY* 7697 *of the Assistant Trade Commissioner, Trade Representation of Czechoslovak Republic, Madras Branch, from payment of the tax leviable under the Madras Motor Vehicles Act*, 1931. [*Laid on the table of the House under section* 11 (2) *of the Madras Motor Vehicles Taxation Act*, 1931 (*Madras Act III of* 1931).]

4. *Notification issued with G.O. Ms. No.* 1865, *Public (Services-A), dated* 8*th June* 1957, *amending the Madras Public Service Commission Regulations*, 1954. [*Laid on the table of the House under Article* 320 (5) *of the Constitution.*]

5. *Notification issued with G.O. Ms. No.* 469, *Industries, Labour and Co-operation, dated* 8*th February* 1957, *amending rules* 81 *to* 84 *of the Madras Factories Rules*, 1950.

6. *Notification issued with G.O. Ms. No.* 1880, *Revenue, dated* 6*th May* 1957, *amending rule* 49 *of the Madras Entertainments Tax Rules*, 1939, *framed under the Madras Entertainments Tax Act*, 1939.